# சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவு என தெரிவித்து மக்களுக்கு அதிக வரிச்சுமையை கொடுத்துள்ளது அரசு!

## அதன் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் சஜித் சுட்டிக்காட்டு

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட செயற்பாட்டு பிரதானி பீட்டர் ப்ரூவர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவு எனக்கூறி தற்போதைய அரசாங்கம் வற் உட்பட பல வகையான வரிகளை சுமத்தி மக்களுக்கு அதிக வரிச்சுமையை கொடுத்து, வாழ்க்கைச் செலவினத்தை அதீதமாக அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பொது மக்கள், கர்ப்பிணிகள், சிறுவர்கள், நடுத்தர வர்க்கம், அரச ஊழியர்கள் என பல துறைகளைச் சேர்ந்தவர்கள் அநாதரவாகியுள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலும் நேற்று மக்கள் விடு தலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

2 ➤



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 05 வெள்ளிக்கிழமை 19.01.2024 கதிர் 161

14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளி மைதானத்தில்
JANUARY 19 | 20 | 21
JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR



## 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர்

### இன்று தென்னாபிரிக்காவில் ஆரம்பம்!

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண் ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் தென்னா பிரிக்காவில் இன்று தொடங்கி வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த போட்டியில் இலங்கை உட்பட 16 நாடுகள் பங்கேற்கவுள்ளன. அந்தவகையில் இன்று தென்னாபிரிக்காவின் சென்வெஸ் மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டி யில் தென்னாபிரிக்க, மேற்கிந்தியத் தீவகள் அணிகள் விளையாடுகின்றன.

இலங்கை அணியானது தனது முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே அணியை வரும் 21 ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளது. (04

## ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டவருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் ஆயுள் தண்டனை

கிளிநொச்சி போராலை என்ற இடத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு 143 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட குற்றவாளிக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றம் ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின் போது 143 கிராம் ஹெரோயினுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு தொடரப்பட்டு நேற்றைய தினம் குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ ஏ. எம் .ஏ சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்பளிக்கப்பட்டது.

குறித்த வழக்கானது நேற்றுப்பகல் தீர்ப்புக்காக 2➤

## 14 ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று காலை முற்றவெளியில் ஆரம்பமானது!

காலைக்கதிர் ஊடக வலையமைப்பின் ஊடகப் பங்களிப் போடு நடைபெறும் 14 ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று காலை ஆரம்பமாகியது.

இன்று முதல் வரும் ஞாயிற்றுக் கிழமைவரை 3 தினங்கள் கடைபெறும் இந்தக் கண்காட்சியில் இலங்கை முழுவதிலிருந்தும் ஏராளமான நிறுவனங்களும், தொழில் முயற்சியாளர்களும் பங்கெடுத்துள்ளனர்.

இன்று காலை இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பீடாதி பதி ந.கெங்காதரன், யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தினர், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் அனுசரணையாளர்கள், பங்கேற்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




## மின்னணு அடையாள அட்டை விரைவில் தரவுச் சேகரிப்பு

புதிய மின்னணு தேசிய அடையாள அட்டை தொடர்பான குடிமக்களின் தரவுச் சேகரிப்பு எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சின் வளாகத் தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புதிய மின்னணு அடையாள அட்டையை நடைமுறைப்படுத்துவது தொடர் பான அடிப்படைப் பணிகள் நிறைவடைந் துள்ளதாகவும், அதற்கான உள்கட்டமைப் புகள் தற்போது தயாராகி வருவதாகவும் அவர் கூறினார்.

குடிமக்களின தரவுகள், கைரேகைகள் மற்றும் முகத்தை அடையாளம் காணுதல் தொடர்பான தரவுகள் சேகரிப்பு, அனைத்து பிராந்திய செயலகங்கள் ஊடாக எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படவுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். (04)

## மின்சாரசபை ஊழியர்கள் 15 பேரை பணி இடைநீக்கம் செய்யப் பணிப்பு!

### அமைச்சர் காஞ்சன விஜேசேகர நடவடிக்கை

மின்சார சபையின் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த 15 ஊழியர்களை பணி இடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் பணிப்புரைக்கு அமைய மின்சார சபையினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற போராட் டத்தின் போது, மின் கட்டணங்களை செலுத்துவதற்காக வருகை தந்திருந்த மின் பாவனையாளர்களுக்கு இடையூறு விளைவித்திருந்த 15 ஊழியர்களே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளதாக மின்சார சபை அறிவித் துள்ளது.

மின்சார சபையினை அரசாங்கம் தனியார் மயமாக்கப் போவதாக கூறி அண்மையில் பல தொழிற்சங்கங்கள் எதிர்ப்புப் பிரசாரம் உள்ளிட்ட பல போராட் டங்களை முன்னெடுத்திருந்தன.

இந் நிலையில் மின்சார சபை நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட வழி காட்டல்களை மீறும்வகையிலும், சேவை களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், இடையூறு விளைவித்த ஊழியர்களை பணி இடைநீக்கம் செய்து, உரிய ஒழுக்காற்று 2➤

## சீனி இறக்குமதியில் மோசடிகள் பணத்தை மீளப்பெற அறிவுறுத்து

கடந்த 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற சீனி இறக்குமதியின் போது மோசடியில் ஈடுபட்ட நிறுவ னங்களிடம் இருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அர சாங்க நிதிப்பற்றிய குழு அறிவு றுத்தியுள்ளது.

நிதியமைச்சு மற்றும் உள் நாட்டு இறைவரித் திணைக்களத் திற்கே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குறைக்கப்பட்ட வரி 2➤

# புதிய சட்ட வரைவு கையளிப்பு!

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஆக்கபூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு பொது அரங்கக்கலை வகைப்படுத்தல் சட்ட வரைவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழுவால் அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய வரைவைத் தயாரிப்பதற்காக தணிக்கை சபையின் முன்னாள் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் திரைப்படவியலாளர் அசோக ஹாதகம, நாடகக் கலைஞர் ராஜித திஸாநாயக்க, படைப்பாளர் அனோமா ராஜகருணா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

திரைப்படம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து புதிய சர்வதேச போக்குகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 1912 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொது அரங்கேற்றக்கலை கட்டளைச் சட்டத்தினை ஆராய்ந்து இந்தப் புதிய சட்டத்தைச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சட்டத்தின் ஊடாக கலைப் படைப்புகள் தொடர்பில் எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், இந்தச் சட்டத்தின் மூலம் படைப்பு சுதந்திரம் முழுமையாகப் பாதுகாக்கப்படும் எனவும் குழுவின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தெரிவித்தார் - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் மே 2 முதல் 6 வரையில் நடைபெறும்

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வீட்டுக்கு வீடு சென்று வாக்காளர் கணக்கெடுப்பு மேற்கொள்ளல் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகியுள்ளதுடன் இக்கணக்கெடுப்புகள் பெப்ரவரி 29 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் பெப்ரவரி 15 முதல் மார்ச் 22 வரை தேர்தல் அலுவலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும். 'அ', 'ஆ' பட்டியல்கள் மற்றும் துணைப் பட்டியல்களின் காட்சிப்படுத்தல் மே மாதம் 2 ஆம் திகதி முதல் மே 6 வரை நடைபெறும் என தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உரிமை கோரல்கள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகள் மே 24 முதல் ஜூன் 28 வரை நடைபெறும். 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் உறுதிப்படுத்தப்படல் 2024 ஜூலை 15 ஆம் திகதி மேற்கொள்ளப்படும், என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ரெத-47)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

### சீனி இறக்குமதியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதத்தை நியாயமற்ற வகையில் பாரிய நிறுவனங்கள் அனுகூலம் பெறுவதற்கு இடமளித்தமையைத் தடுப்பதற்கு எந்தவொரு பொறுப்புக்கூறும் முறைமையும் செயற்படுத்தப்படவில்லை எனவும் குறித்த குழு சுட்டிக் காட்டியுள்ளது. (04)

### மின்சாரசபை ஊழியர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனை தொடர்ந்தே 15 ஊழியர்களும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (04)

### ஹெரோயினுடன் கைது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இரண்டாவது நபர் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

முதலாவது எதிரி சார்பாக சட்டத்தரணி சிறிகாந் தாவும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச சட்ட வாதி என்.என். அர்ஜுனகுமாரும் முன்னிலையாகியிருந்தனர்.

எதிரி சார்பாக ஆஜரான சட்டத்தரணி, குறித்த எதிரியானவர் இதற்கு முன்னர் குற்றங்கள் எதிலும் ஈடுபடவில்லை என்றும் அவர் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்றுள்ளவர் என்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையாகவும் காணப்படுகின்றார் எனவும் தெரிவித்து, தண்டனைக் குறைப்பு விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தார்.

இதே நேரம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாக ஆஜரான சட்டவாதி, குறித்த குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனையானது ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். குற்றவாளிக்கான தண்டனையானது ஒரு தனிநபருக்கான தண்டனையாக கருதுவது அல்லாது ஓர் எதிர்கால இளம் சமூகத்தைப் பாதுகாக்கின்ற விடயமாகக் கருதி வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அவர்களது முன்வைப்புகளைச் செவிமடுத்த மன்று, குற்றவாளிக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. (02)

### சர்வதேச நாணய நிதியத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கலந்துரையாடலுக்காக சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பீட்டர் ப்ரூவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு இணைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசர சேவைப் பிரிவுக் கட்டிடத் தொகுதி

## உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது



(நூருல் ஹுதா உமர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சேவை பிரிவுக்கான கட்டிடத் தொகுதி நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளித்து வைக்கப்பட்டது.

இலங்கை தேசிய கட்டிடங்கள் திணைக்களத்தினால் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த புதிய கட்டிடத் தொகுதி, உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம் மாஹிர் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் கார்த்திகேயன் அவர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகா தார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டதுடன் நிகழ்வின் இறுதியாக மரங்களும் நட்டு வைக்கப்பட்டன. அத்துடன் சீன செயற்றிட்டத்தின் மூலம்நடைபெறும்கட்டுமானப்பணிகளையும்குறித்த குழு வினர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாவற்காடு தமிழ் வித்தியாலயத்தில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு



(கற்பிட்டி செய்தியாளர் சியாஜ்)

கற்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டு க. பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் பீ.ஜெனட்ராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேத்தாப்பலை பங்கின் அருட் சகோதரர் பிரசங்க, புத்தளம் வலய ஆசிரிய ஆலோசகர்கள், கற்பிட்டி கோட்ட ஆசிரிய ஆலோசகர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து மாணவர்களை கௌரவித்தனர்.

மாணவர்களால் பாடசாலைக்கு பெற்றுத்தரப்பட்ட வெற்றியானது ஒரு வரலாற்று சிறப்புமிக்க சாதனையாகும். இதுவரை காலமும் பாடசாலையில் அனைத்து மாணவர்களும் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்கவில்லை. இம்முறை ஒரே தடவையில் பரீட்சை எழுதி 9 பாடங்களிலும் சித்தி பெற்று 100 வீத வெற்றியை பெற்றுத் தந்தமை வரலாற்று சாதனை, என அங்கு உரையாற்றியவர்கள் குறிப்பிட்டனர்.

# மல்வத்தை பிரதேச வைத்தியசாலைக்கு ஆய்வுக் குழு கண்காணிப்பு கள விஜயம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் சுமார் 1.5 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்படும் விடுதி கட்டிடத்தை பார்வையிட்டதுடன் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒப்பந்தக்காரரையும் கலந்தாலோசனையும் செய்தனர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன் அவர்களும் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம் மாஹிர் அவர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் குறித்த கள விஜயத்தில் இணைந்து கொண்டதுடன் வேலைத்திட்டத்தை விரைவாக முடிவுறுத்தி அதனை பாவனைக்காக கையளிப்பது தொடர்பிலும் கலந்தாலோசித்தனர்

குறித்த நிகழ்வில் வைத்தியசாலையின் நீண்டநாள் தேவையாக இருந்த குளிரூட்டி வழங்கி வைக்கப்பட்டதுடன் ஞாபகார்த்தமாக மரமொன்றையும் பணிப்பாளர் நட்டு வைத்தார்

மல்வத்தை பிரதேச வைத்திய அதிகாரி அவர்களின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்திய சாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஹவுதிக்களின் மீதான தாக்குதலைத் தொடரும் அமெரிக்கா சர்வதேச பயங்கரவாதக் குழுவாகவும் அதனை அறிவித்தது!



செங்கடல் சர்வதேச வணிகப் பாதையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு காரணமாக இருப்பதாகத் தெரிவித்து, யேமனின் ஹவுதி படையைச் சர்வதேச பயங்கரவாதக் குழுவாக அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது. மேலும் ஹவுதிகளின் மீதான தாக்குதல்களையும் அது தொடர்ந்து வருகிறது.

யேமன் உள்நாட்டுப் போரில் அந்த நாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய ஹவுதிகள் ஹமாஸ்களுக்கு ஆதரவாக இஸ்ரேஸ் துறைமுகத்துக்குச் செல்லும் அந்நாட்டுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி, செங்கடல் பாதையில் செல்லும் கப்பல்கள் மீது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் கொண்டு தாக்குதல் நடத்திவருகின்றனர்.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவை. இதனால் ,செங்கடல் வணிகப் பாதையில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகப் பல நாடுகளும் விசனம் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா யேமனின் ஹவுதிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியது.

இந்த பதிலடியின் மற்றொரு முன்னேற்றமாக யேமனின் ஹவுதி அமைப்பினரை 'சர்வதேசப் பயங்கரவாதக் குழு' என்று அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது. மேலும் ஹவுதிகளின் இலக்குகள் மீதான தாக்குதல்களைத் தொடர்வதாகவும் அறிவித்திருக்கிறது.

தற்போது அமெரிக்கா நடத்தியிருப்பத சமீபமாக யேமன் மீது நடத்தப்பட்ட நான்காவது நேரடித் தாக்குதலாகும்.

ஹவுதிகளைத் தீவிரவாதிகள் பட்டியலில் இணைப்பதால் அது, அவர்களின் நிதி மற்றும் ஆயுத வளங்களை மட்டுப்படுத்தும் என்பது அமெரிக்காவின் எண்ணமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அமெரிக்காவின் அரசு செயலாளர் அண்டனி பிளிங்கனும் அறிவித்துள்ளார்.

என்றாலும் இஸ்ரேலுக்குச் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் என்றும், பயங்கரவாதக் குழு என்ற அறிவிப்பு தங்களின் நிலைப்பாட்டை மாற்றாது என்றும் ஹவுதிகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த வாரத்தில், செங்கடல் பாதையில் செல்லும் சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்தும் ஹவுதிகள் அதற்குச் செவி சாய்க்கவில்லை. இதனைத் தொடர்ந்து யேமன் நாட்டின் ஹவுதிகள் தொடர்புடைய இலக்குகள் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் தாக்குதல் நடத்தின. ஹவுதிகள் தொடர்புடைய 30 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் குறித்து பேசிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், "எங்களுடைய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் கப்பல்கள் செல்லும் வழித்தடத்தின் சுதந்திரத்தை கெடுக்கும் எந்தச் செயலையும் நாங்களோ எங்களது கூட்டாளிகளோ பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்பதை இந்தத் தாக்குதல்கள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. ஹவுதிகள் நேரடியாக அமெரிக்கக் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். செங்கடல் வணிகப் பாதையைப் பாதுகாக்க அமெரிக்கா தலைமையிலான 'ஒபரேஷன் பிராஸ்பெரிட்டி கார்டியன்' க்கு 20 க்கும் அதிகமான நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. என்றாலும் தற்போதைய அமெரிக்க, பிரிட்டன் தாக்குதல் அந்த ஒபரேஷனுடன் தொடர்புடையவை அல்ல. ஹவுதிகளின் பொறுப்பற்ற தாக்குதல்களுக்கு சர்வதேச சமூகத்தின் பதிலடி ஒற்றுமையானது - உறுதியானது" என்று தெரிவித்திருந்தார்.

ஐரோப்பா - ஆசியா கண்டங்களுக்கு இடையேயான கப்பல் போக்குவரத்தில் 15 சதவீப் பங்கினை வகிக்கும் முக்கிய கடல் வணிகப்பாதையான செங்கடல் பாதையில் இதுவரை 27 க்கும் அதிகமான கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது சர்வதேச அளவில் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசும் முதல்வரும் உள்ள மாநிலம் அசாம்தான் என ராகுல் காந்தி சாடல்!

## அவரின் நடைப்பயணத்துக்கு எதிராக வழக்கு



இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசும், முதல்வரும் கொண்ட மாநிலம் அசாம் மாநிலம் என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். இந்தியாவின் காங்கிரஸ் கட்சியினுடைய முக்கிய தலைவர் ராகுல் காந்தி மணிப்பூர் முதல் மும்பை வரை இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையை மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 14 ஆம் திகதி மணிப்பூரின் தவுபால் மாவட்டத்தில் இருந்து இந்த யாத்திரை தொடங்கியது. தற்போது அசாமில் நடந்து வரும் யாத்திரை வியாழக்கிழமை மதியம் அங்குள்ள சிவசாகர் மாவட்டத்தில் இருந்து மரியானி நகரை அடைந்தது.

அப்போது, சிவசாகர் மாவட்டத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ராகுல் காந்தி, "அசாமில் ஆளும் பாஜக அரசும் அதன் கொள்கை ஊற்றான ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் இணைந்து பொதுமக்கள் பணத்தைச் சூறையாடி வருகின்றன.

இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த மாநிலம் என்றால் அது அசாம்தான். பெரிய ஊழல்வாதி என்றால் அது அசாம் முதல்வர்தான். இந்த யாத்திரையில் அசாம் அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் தோலுரிப்போம். அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மாவின் ஒட்டுமொத்த குடும்பமும் ஊழலில் ஈடுபட்டுள்ளது. அவரது மனைவி, குழந்தைகள் அனைவரும் ஊழல்வாதிகள்.

பணத்தைக் கொண்டு அசாம் மக்களை விலைக்கு வாங்கலாம் என்று அவர் நினைக்கிறார். அசாம் மக்களை அப்படி விலைக்கு வாங்கிவிட முடியாது. மணிப்பூர் பிரிந்து கிடக்கிறது. மாதக்கணக்கில் அங்கு வன்முறை நிலவுகிறது. மக்கள் வன்முறையால் வீடுகளை, உடைமைகளை இழந்து தவிக்கின்றனர். அங்கே இன்னும் அமைதி திரும்பவில்லை. இருந்தும் இதுவரை பிரதமர் அங்கு செல்லவில்லை", என்றும் அவர் சாடினார்.

ராகுல் காந்தியின் இந்தக் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ள முதல்வர் பிஸ்வ சர்மா, "என்னைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே காந்தி குடும்பந்தான் ஊழல் நிறைந்த குடும்பம். அவர்கள் ஊழல்வாதிகள் மட்டுமல்ல, போலியானவர்கள். அவர்களின் குடும்பப் பெயர் காந்தி கிடையாது. போலிப் பெயரைச் சுமந்து கொண்டு திரிகிறார்கள்", என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், யாத்திரையை ராகுல் காந்தி நிர்ணயிக்கப்பட்ட பாதையில் மேற்கொள்ளாமல் வேறு பாதைகளில் சென்றதாகத் தெரிவித்து, அசாம் மாநில அரசு ராகுலின் நடைப்பயணத்துக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளது. (04)

# ஹமாஸ் பிடியில் உள்ள பிணைக்கைதிகளுக்கு மருந்துப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன

ஹமாஸ் பிடியில் உள்ள பிணைக்கைதிகளுக்கு மருந்துப் பொருள்களை கட்டார் மற்றும் பிரான்ஸ் நாடுகள் அனுப்பியுள்ளன.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையிலான போர் 100 நாள்களுக்கு மேலாகத் தொடர்ந்துவரும் நிலையில் இரு தரப்புக்குமிடையே மத்தியஸ்தம் செய்த கட்டார் மற்றும் பிரான்ஸின் ஒப்பந்தத்தின்படி காஸாவுக்கு மருந்துப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்கள் எகிப்துக்கு சென்று அங்கு செம்பிறைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும், அவர்கள் ஹமாஸ் ஆளுகையில் உள்ள பிராந்தியத்துக்குக் கொண்டு சேர்ப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், முற்றுக்கையிடப்பட்ட காஸா பகுதியில் சிக்கியுள்ள மக்களுக்கான மருந்து மற்றும் வாழ்வாதார உதவிகளும் அனுப்பப்படவுள்ளன.

நவம்பரில் இருதரப்புக்குமிடையே ஒரு வார கால போர் நிறுத்தமும் பிணைக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தமும் நிறைவேறியது.

ஒக்டோபர் 7 இல் ஹமாஸால் கடத்திச் செல்லப்பட்டவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் விடுவிக்கப்பட்ட நிலையில் நூற்றுக்கும் அதிகமானோர் இன்னமும் ஹமாஸ் அமைப்பின் பிடியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நிரந்தரப் போர் நிறுத்தம் அமலாகும் வரையில் தம் வசமுள்ள கைதிகளை விடுவிக்கப் போவதில்லை, என ஹமாஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# வரும் மாதங்களில் மேலும் பணி நீக்க நடவடிக்கை கூகுள் நிறுவனத்தின் சுந்தர் பிச்சை தெரிவித்தார்!

சமீபத்திய பணிநீக்க நடவடிக்கையைத் தொடர்ந்து, நிறுவனத்தின் நடவடிக்கைகளை எளிமையாக்கும் வகையில் வரும் மாதங்களில் மேலும் பணி நீக்க நடவடிக்கைகள் இருக்கும் என்று கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை கூறியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து சுந்தர் பிச்சை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், "இந்தப் பணிநீக்க நடவடிக்கைகள் நிறுவனத்தின் செயல்பாட்டை அதிகரிக்கும் வகையில் பல்வேறு துறைகளின் அடுக்குகளை நீக்குவதாக இருக்கும். இந்தப் பணி நீக்கம் கடந்த ஆண்டின் அளவில் இருக்காது. அதேபோல் எல்லா குழுக்களிலும் இருக்காது" என்று தெரிவித்துள்ளார்.

கூகுள் அசிஸ்டண்ட் பிரிவில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட சில நாட்களுக்குள் இந்த அறிவிப்பு வந்துள்ளது. இந்தப் பணி நீக்க நடவடிக்கையில் கூகுள் நெஸ்ட், பிக்ஸல், பிட்பிட், விளம்பர விற்பனைப் பிரிவு போன்றவை அதிகமாகப் பாதிக்கப்பட்டன. முன்னதாக, 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கூகுள் நிறுவனம் சர்வதேச அளவில் உள்ள தனது ஊழியர்களில் 12,000 பேர் அல்லது 6 சதவீதம் பேரை பணி நீக்கம் செய்யப்போவதாக அறிவித்தது. 2023 செப்டம்பரில் உலக அளவில் அந்நிறுவனத்தில் 1,82,381 பேர் இருந்தனர். கூகுள் வரலாற்றிலேயே இந்தப் பணி நீக்க நடவடிக்கை மிகப்பெரியது என்றாலும் நிறுனத்துக்கு இது மிகவும் இன்றியமையாதது என்று சுந்தர் பிச்சை முன்பு தெரிவித்திருந்தார்.

நிறுவனத்தின் ஊழியர்களின் கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கையாக இந்த பணிநீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது பிட்பிட்டின் இணை நிறுவனர்களான ஜேம்ஸ் பார்க் மற்றும் எரிக் ப்ரைட்மனும் நீக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி என்ற நம்பிக்கையுடன் இந்த புத்தாண்டை தொடங்கியுள்ள நிலையில், பெரிய தொழிநுட்ப நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பத்தில் முதலீடு செய்வதன் தொடர்ச்சியாக ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளன. கூகுள் மற்றும் அமேசான் போன்ற மிகப்பெரிய தொழநுட்ப நிறுவனங்கள், ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்தன.

மேலும், செயற்கை நுண்ணறிவு தொழிநுட்பத்தின் முன்னேற்றம் காரணமாக அடுத்த சில மாதங்களில் மேலும் பணிநீக்கம் இருக்கும் என்று அறிவித்துள்ளன.

அமேசன் நிறுவனம் அதற்குச் சொந்தமான பிரைம் வீடியோ மற்றும் எம்ஜிஎம் ஸ்டுடியோ பிரிவு ஊழியர்கள் நூற்றுக்கணக்கானவர்களை பணிநீக்கம் செய்தது. அதேபோல், அமேசானுக்குச் சொந்தமான லைவ்ஸ்ட்ரீமிங் தளமான டுவிட்ச்சின் ஊழியர்கள் 500 பேரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பப் போட்டியில் மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் நேரடியாக மோதும் வகையில், கூகுள் மற்றும் அமேசன் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பத்தில் பில்லியன்களை முதலீடு செய்து வருகின்றன. இந்தப் பின்னணியில் ஊழியர்களின் கட்டமைப்பை மறுசீரமைக்கும் நடவடிக்கையாக இந்தப் பணி நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது. (04)

# கிழக்குப் பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் அறிவுக் கடல் - கரணவாய் கருணை யோகன்!

## நட்பு மனதின் நினைவுப் பதிவு



யாழ்ப்பாணம் கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கருணை யோகன் என அழைக்கப்படும் செல்லையா யோகராசா ( பிறப்பு - 17 டிசம்பர் 1949, மறைவு - 7 டிசம்பர் 2023) அவர்களது மரணச் செய்தி அறிந்ததும் மிகுந்த வேதனையடைந்தமையோடு அதிர்ச்சியுமுற்றேன்.

அன்னாரின் பிறப்பிடமான கரணவாயையே சொந்த இடமாகக் கொண்ட நான் சிறுவனாக இருந்த காலப் பகுதியிலிருந்தே அவரை நன்கறிவேன்.

1968 ஆம் ஆண்டில் நான் யா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 8 ஆம் வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோது அவர் அதே கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் பயின்றுகொண்டிருந்தார். எனது வகுப்பறைக்கு அடுத்த அறையே அவருடைய வகுப்பைக்கொண்டிருந்தது.

அவர் உயர்தரத்தில் பயின்றுகொண்டிருந்தார். எனது வகுப்பறைக்கு அடுத்த அறையே அவருடைய வகுப்பைக் கொண்டிருந்தது.

வேட்டி சகிதமாகத் தினந்தோறும் வருகை தரும் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியிலே காற்சட்டை அணிந்துவரும் ஒரேயொரு மாணவராகவும் மெல்லிய தோற்றமுடையவராகவும் அவர் விளங்கியிருந்தார். அத்தோடு வகுப்பு முதல்வராகவும் அன்னார் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வாசிப்பின்மீது அசாதாரண ஆர்வம் கொண்டிருந்த அன்னார் தமிழகத்திலிருந்து "இராணி முத்து" என்னும் பெயரில் மாதமொருமுறை வெளிவரும் நாவல்களைத் தவறாமல் வாங்கி வாசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

என்னைவிட ஐந்து வயதுகள் மூத்தவரான அவரிடம் காணப்பட்ட மற்றவர்கள் மீது காழ்ப்புணர்வு கொள்ளாமை, அவர்களின் முன்னேற்றம் தொடர்பில் களிப்படைதல், அடுத்தவர்களை ஏளனமாக அணுகும் இழிவான தன்மை இல்லாமை, மற்றவர்கள் மீது அவதூறுகளை அள்ளிவீசும் கபடத்தனம் இல்லாமை, அடக்கமான அமைதியான அறிவுசால் இயல்பு, எளிதில் பரபரப்படையாமல் நின்று நிதானித்துச் செயலாற்றும் தன்மை, உளவியல் சார்ந்தே தனது மாணவர்கள் உள்ளடங்கலாக ஏனையோரை நல்வழிப்படுத்தும் பாங்கு ஆகியவை என்னை மிக வெகுவாக ஈர்த்திருந்தன எனலாம்.

1980களின் இறுதியில் நான் ஒரு மாத சஞ்சிகை வெளியிடும் நோக்கில் அவருடைய இல்லத்துக்குச் சென்று ஒரு கவிதை தரும்படி கோரி நின்றபோது அவர் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையை அம்பலப்படுத்தும் விதமாக ஒரு கோப்பைத் தேநீருக்கே உழைத்து ஓடாகின்றார் - என்னும் தலைப்பில் கவிதையொன்றை எழுதி எனக்குத் தந்தமையோடு என்னால் வெளியிடப்படவிருந்த அச்சஞ்சிகையின் இயல்பை எடைபோட்டு அவ்வியல்புக்கேற்ப இலக்கிய ஆக்கம் வழங்கக் கூடிய பருத்தித்துறையைச் சேர்ந்த அன்பர் ஒருவரின் முகவரியையும் தந்து, அவரைச் சந்திக்கும்படி கூறியமையையும் நான் இன்றும்கூட எண்ணிப் பார்க்கின்றேன்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையைச் சித்திரிக்கும் விதமாக அன்று கவிதை தந்த அன்னார், பின்னாளில் மலையக மங்கையை மணவாட்டியாக்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்விடயத்தில் எனது தந்தையாரும் பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்திலும், சுதந்திர இலங்கையிலும் தெனவகச்க, இரத்தினபுரி - முல்லாக்கந்த, நூறி போன்ற இடங்களில் தேயிலைத் தொழிற்சாலை உத்தியோகத்தராகச் சேவையாற்றியிருந்தமையையும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். துரதிஷ்டவசமாக அச்சஞ்சிகை வெளியிடும் முயற்சி தோல்வியடைந்தது.

ஒரே கிராமத்தைச் சேர்ந்த இரு வட்டாரத்தவர்களான நானும் அவரும் அரசியலில் இடதுசாரித்துவப் போக்குடையவர்களாக விளங்கியபோதுங்கூட, நாட்டின் சமகால அரசியல் போக்குக்கு இயைபாக எப்போதும் நீதி, நியாயத்தின் பக்கமே இருந்து வந்துள்ளோம்.

அவருடைய வட்டாரத்திலே விபுலானந்தர் சனசமூக நிலையம் என்னும் பெயரில் வாசிகசாலையொன்று அமைந்திருந்தது. அவர் பிறந்த ஆண்டான 1949இல் அவ்வாசிகசாலை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. என்னுடைய வட்டாரத்தில் அக்காலப்பகுதியில் "ஞானசூரிய சனசமூக நிலையம்" என்னும் பெயரில் வாசிகசாலையொன்று அமைந்திருந்தது. நம்மிருவரதும் வாசிப்புக்கான களமாக இவ்விரு வாசிகசாலைகளும் அமைந்திருந்தனவெனலாம்.

மாகோ - கொழும்பு - கறுவாக்காடு ஆகிய இடங்களின் தபால் அலுவலகங்களில் கடமையாற்றிய அன்னார் பின்னர் பட்டதாரி ஆசிரியர் சேவையில் சேர்ந்து யா- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகவும் சேவையாற்றியிருந்தார்.

அக்காலப்பகுதியில் அவர் அடிக்கடி தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அதிர்ந்து பேசியோ, கபடத்தனமான காழ்ப்புணர்வு மிக்க கருத்துக்களையோ யாருடைய மனதையும் புண்படுத்தி அறியாத பெருந்தகையாளரான அவர், தன்னுடைய மாமனரான பண்டிதர் முருகேசு என்பாரின் வழிகாட்டுதலில் கல்வித்துறையில் பேராசிரியராகவும், கலாநிதியாகவும் உயர்வடைந்தமையோடு தொழிலிலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக உயர்ச்சி பெற்றிருந்தமையையும் இவ்விடத்தில் மிக மகிழ்ச்சியோடு குறிப்பிட்டேயாக வேண்டும்.

அன்னார் இவ்வுலகைவிட்டு 74 ஆவது அகவையில் பிரிந்தபோதும் அவர் இன்னும் சில காலம் வாழ்ந்து, தான் சார்ந்த அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் கல்விப் புலத்துக்கும் சேவையாற்றவில்லையே, என்னும் மிகுந்த ஆதங்கத்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவேண்டும் எனத் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய முருகனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**வீரப்பதி விநோதன்**
**தென் கருணை, கரவெட்டி.**

## கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி காப்பெட் இடும் பணி ஆரம்பம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா , கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி காப்பெட் இடும் பணி திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யினால் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இவ்வீதியில் பயணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இவ்வீதி காப்பெட் இடப்படுவதனால் இலகுவாக தமது நாளாந்த பணிகளை மேற்கொள்ள முடியுமென தாம் எதிர்பார்ப்பதாக மக்கள் குறிப்பிட்டனர்.



# தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் மேம்படுத்தல் செயலமர்வு - 2024



(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்கா மற்றும் லுஆஆயு மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டில் KDMC nedry, கல்முனை கல்வி நிறுவனத்தின் மூலமாக (18) இன்று காலை முதல் மாலை வரை தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் மேம்படுத்தல் சம்பந்தமான செயலமர்வு அமைப்பின் பணிப்பாளரும், YMMA மாவடிப்பள்ளி கிளையின் தலைவருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் KDMC கல்வி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் வளவாளராக சம்மாந்துறை பிரதேச செயலக மென்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ். இர்பான் மௌலானா கலந்து கொண்டு இளைஞர் யுவதிகளுக்கு கல்வியின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால கல்வி மற்றும் தொழில நுட்பங்கள் பற்றி விரிவுரையாற்றினார்.

மேலும் KDMC நெனசல கல்முனை கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எம். ஹாஜா, கல்வியின் தற்போதைய நிலை, தொழில் வழிகாட்டல், எதிர்கால இளைஞர்களின் சிந்தனை, தனியார் கல்வியின் அனுகூலம் என பல விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கின் கேடய அமைப்பின் தலைவரும், அக்கறைப்பற்று மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் அவர்கள் கலந்துசிறப்பித்ததுடன் மேலும் அதிதிகளாக கிழக்கு மாகாண ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்- மீஷான் பௌன்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான நூருல் ஹுதா உமர், அகில இலங்கை YMMA பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ், அட்டாளைச்சேனை YMMA கிளையின் தலைவர், மனித மேம்பாட்டு அமைப்பின் பிரதிப்பணிப்பாளர், உயர்பீட உறுப்பினர்கள் என பலர் பங்கேற்றனர்.

இங்கு கலந்து கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.






# கிண்ணியாவில் நெல் விளைச்சலில் வீழ்ச்சி



(ஹஸ்பர் ஏ.எச்)

தற்போது பெரும் போக நெற் செய்கை அறுவடை இடம் பெற்று வரும் நிலையில் இம்முறை, தமக்கு விளைச்சல் குறைவு என கிண்ணியா குறிஞ்சாக்கேணி கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட சூரங்கல் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கனமழை மற்றும் கந்தளாய்க் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் வேளாண்மைச் செய்கை நீரில் மூழ்கியுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இயந்திரம் மூலமான அறுவடையின் போது ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபா செலவாகின்றதாகவும், ஏக்கர் ஒன்றுக்க 10 மூடைக்கும் குறைவாகவே கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தரமற்ற கிருமி நாசினி, நோய்த் தாக்கம் காரணமாக விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இப்பகுதியில் 400 ஏக்கருக்கும் அதிகமாக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், ஏற்பட்ட இழப்புகளை அரசாங்கம் நஷ்ட ஈடுகளை வழங்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அம்பாறை கடற்கரைப்பகுதியில் விச நகருயிர்களின் நடமாட்டம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டக் கடற்கரைப் பகுதியில் அண்மைக்காலமாக விச நகருயிர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் கரையோரப் பிரதேச மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதனை அடுத்து அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட மழைவெள்ள நிலைமைகளை கட்டுப்படுத்த ஆற்று முகத்துவாரம் வெட்டப்பட்டன.

இதனால் ஆறுகளில் தேங்கிய வெள்ள நீர் கடலை சென்று சங்கமித்ததனை தொடர்ந்து ஆற்றில் இருந்த விச நகருயிர்கள் கடற்கரை ஓரங்களில் நடமாடி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்விச நகருயிர்கள் இம்மாவட்டத்தில் மருதமுனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், பகுதிகளில் நடமாடி வருகின்றன.

விச நகருயிர்களான பாம்புகள், பூரான்கள், தேள்கள், நண்டுகள், விசப்பூச்சிகளின் தொல்லை கடற்கரைப் பகுதிகளில் அதிகரித்துள்ளதனால் அங்கு செல்கின்ற பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# காலைக்கதிர் ஊடக வலையமைப்பின் ஊடகப் பங்களிப்பில் 14 ஆவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
























# காலைக்கதிர் ஊடக வலையமைப்பின் ஊடகப் பங்களிப்பில் 14 ஆவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி


























JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!